NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 07 | இஸ்லாம் | 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ........................ புள்ளிகள்

பகுதி - 01

## 01. மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக

1. ஈமான் கொள்ள வேண்டிய விடயங்களில் மூன்றாவது
   01. அல்லாஹ்வை நம்புதல்
   02. மலக்குகளை நம்புதல்
   03. மறுமையை நம்புதல்
   04. வேதங்களை நம்புதல்

2. தாய்ப்பாலை மாத்திரம் அருந்தும் இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர்
   01. கடுமையான நஜீஸ்
   02. இலகுவான நஜீஸ்
   03. சாதாரண நஜீஸ்
   04. நஜீஸ் இல்லை

3. ரிஸாலத் என்றால்
   01. நபித்துவம்
   02. நம்பிக்கைக் கோட்பாடு
   03. தூதுத்துவம்
   04. மறுமை வாழ்க்கை

4. மறுமை நாளில் முதலாவது விசாரிக்கப்படும் அமல்
   01. நோன்பு
   02. ஹஜ்
   03. தொழுகை
   04. ஸகாத்

5. உடலில் கட்டாயம் மறைக்க வேண்டிய பகுதியை அரபியில் எவ்வாறு அழைப்பர்
   01. ஜனாபத்
   02. அவ்ரத்
   03. ஹதஸ்
   04. ஜபீரத்

6. நபி நூஹ் (அலை) அவர்களின் சிறப்புப் பெயர்
   01. ஜாமிஉல் குர்ஆன்
   02. அல் பாறுாக்
   03. அஸ்ஸித்தீக்
   04. அபுல் பஷர் அஸ்ஸானி

7. மஃராஜ் நிகழ்வு இடம்பெற்ற இஸ்லாமிய மாதம்
   01. ரமழான்
   02. முஹர்ரம்
   03. ரஜப்
   04. துல் ஹஜ்

8. நபி (ஸல்) அவர்களுக்கு இறங்கிய அல்குர்ஆனின் முதல் ஐந்து வசனங்களும் உள்ளடங்கியுள்ள ஸூரா
   01. ஸூரா பாத்திஹா
   02. ஸூரா பகறா
   03. ஸூரா அலக்
   04. ஸூரா இஹ்லாஸ்

9. நபி (ஸல்) அவர்கள் நேரடியாகக் கலந்து கொண்ட யுத்தங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது
   01. ஜனாபத்
   02. கஸவாத்
   03. நுபுவ்வத்
   04. இபாதத்

10. கலீபா உமர் அலி அவர்களுக்குப் பின் குர்ஆன் பிரதி யாருடைய பாதுகாப்பிலிருந்தது
    01. கதீஜா (ரழி)
    02. ஹப்ஸா (ரழி)
    03. உம்மு ஸல்மா (ரழி)
    04. பாத்திமா (ரழி)

(10 X 2 = 20 புள்ளிகள்)

## 02. சரியாயின் (√) எனவும், பிழையாயின் (x) எனவும் அடையாளம் இடுக

1. ஈமான் முபஸ்ஸல் என்பது சுரக்கமான ஈமான் ஆகும் ( )
2. நபி (ஸல்) அவர்கள் இறுதி நபி ஆவார்கள் ( )
3. சிறு தொடக்கை நீக்க குளிக்க வேண்டும் ( )
4. வெட்க உணர்வு ஒரு மனிதனுக்கு அவசியமில்லை ( )
5. உயிர்களைக் காப்பாற்றும் மலக்கு இஸ்ராபீல் (அலை) ஆவார் ( )
6. நபி இத்ரீஸ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட சுகுபுகள் 30 ஆகும் ( )
7. மஸ்ஜிதுன் நபவி இஸ்லாமிய சமூகத்தின் மத்திய நிலையம் ஆகும் ( )
8. யமாமா யுத்தம் கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களின் காலத்தில் இடம்பெற்றது ( )
9. உமர் (ரழி) அவர்களின் மகள் ஆயிஷா (ரழி) ஆவர்கள் ( )
10. தேசத்தின் நலனுக்காக முஸ்லிம்கள் பிரார்த்திக்க வேண்டும் ( )

(10 X 2 = 20 புள்ளிகள்)

## 03. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக

1. லைலத்துல் கத்ர்………………………….. மாதங்களை விட சிறந்தது
2. மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றவர்கள்…………………………….. என அழைக்கப்பட்டனர்
3. நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள் உங்களுடைய பொறுப்புக்கள் பற்றி……………………….. விசாரிக்கப்படுவீர்கள்
4. தொழுகை நபி (ஸல்) அவர்களுக்கு…………………………… பயணத்தின் போது கடமையாக்கப்பட்டது
5. உடல் உறுப்புக்களில் காயம் ஏற்பட்டு போடப்படும் கட்டுக்கு………………………… எனப்படும்

(5 X 2 = 10 புள்ளிகள்)

### பகுதி - 02

- **முதலாம் வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும் ஏனையவற்றிலிருந்து மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக**

**01. சுருக்கமான விடை தருக.**

1. நபிமார்களில் விசேடமானவர்கள் யார்?
2. அல்லாஹ் மனிதர்களையும் ஜின்களையும் எதற்காகப் படைத்தான்?
3. அல்லாஹ்வுக்கு கட்டாயம் இருக்க வேண்டிய (வாஜிபான) பண்புகள் எத்தனை?
4. சொர்க்கத்துக்கு பொறுப்பான மலக்கின் பெயர் என்ன?
5. குளிப்பின் இரு வகைகளையும் குறிப்பிடுக?
6. அஸ் ஸவ்ம் என்பதன் பொருள் யாது?
7. திக்ரின் இரு வகைகளும் யாவை?
8. நபி நூஹ் (அலை) அவர்களின் கப்பல் எம்மலை மீது தரை தட்டியது?
9. நபி (ஸல்) அவர்களின் பேரப்பிள்ளைகள் இருவரின் பெயர்களையும் கூறுக?
10. இளவரசன் ராஜசிங்கன் கூறிய ‘‘மா ரேகலே’’ என்ற சொல்லின் தமிழ் கருத்து யாது?

(10 X 2 = 20 புள்ளிகள்)

02. 1. துவ்ஹீத், ரிஜாலத் என்பதன் பொருள் யாது?
2. தொழுகையை நிறைவேற்றுவதன் மூலம் நாம் அடையும் பயன்கள் மூன்று தருக
3. இலகுவான நஜீஸுக்கு உதாரணம் கூறி அவற்றை சுத்தம் செய்யும் முறையை குறிப்பிடுக

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03. 1. தயம்மும் செய்வதற்கான நிபந்தனைகள் இரண்டு தருக
2. சுன்னத்தான குளிப்புகள் மூன்று தருக
3. சுன்னத்தான நோன்புகள் நோற்கப்படும் தினங்கள் ஐந்து தருக

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04. 1. நபி (ஸல்) அவர்கள் சுவன வாலிபர்களின் தலைவர்கள் என யாரைக் குறிப்பிட்டார்கள்
2. உம்மஹாத்துல் மு.ஃ.மினீன்களில் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக
3. வீட்டுச் சூழலில் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள் ஐந்து தருக

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05. 1. அல்குர்ஆன் அருளப்பட்ட இரவு எவ்வாறு அழைக்கப்படுகிறது
2. நபி (ஸல்) அவர்கள் கலந்து கொண்ட போர்கள் மூன்று தருக
3. பாடசாலை மாணவர்கள் பாடசாலையில் பொதுச்சொத்துக்களை பாதுகாக்க எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)